கொழும்புப் பல்கலைக்கழகம், இலங்கை

கலைப்பீடம்

இரண்டாம் வருடக் கலைமாணிப் பரீட்சை – பருவம் II – 2017/2018

SOC 2220 – பால்நிலையின் சமூகவியல்

இரண்டு (02) மணித்தியாலங்கள்

மூன்று (03) வினாக்களுக்கு மட்டும் விடை தருக

---

1. 'பால் வேறுபாடுகளையும் தாண்டிய ஒரு சமூகக் கட்டுமானமே பால்நிலையாகும்.' பொருத்தமான எண்ணக்கருக்களைப் பயன்படுத்தி இக்கூற்றினை விளக்குக.

2. (i) 'தந்தைவழித் தலைமைத்துவமானது ஓர் உலகளாவிய தோற்றப்பாடாகும்'. விளக்குக.

   (ii) தந்தை வழித் தலைமைத்துவத்தின் நிலைப்பானது ஆண், பெண், முழுச் சமூகத்தில் ஏற்படுத்தும் சமூக-பொருளாதாரத் தாக்கத்தைக் கருத்துரைக்க.

3. கலாசார நிலைப்பின் விளைவாக பால்நிலையானது சமூகத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட கலாசார நியாயப்படுத்தலாக எவ்வாறு உருவாகின்றது என்பதை உதாரணங்களுடன் விளக்குக.

4. 'சமூக ஆய்வானது விஞ்ஞான ரீதியானதும் மற்றும் பக்கச்சார்பற்றதுமாகும்.' மாக்கிரிட் இஜ்லரின் (Magrit Eichler) பார்வையில், சமூக ஆய்வானது எவ்வாறு பால்நிலை அடிப்படையிலான வேறுபாடுகளை உள்ளடக்க முடியும் என்பதைப் பரிசீலிக்குக.

5. பெண்களால் உருவாக்கப்பட்ட அறிவானது நாளாந்த வாழ்க்கையில் சமூகத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட அறிவுகளிலிருந்து எவ்வாறு புறக்கணிக்கப்படுகின்றது என்பதனை பெண்ணியவாத அறிவாதாரவியலின் தோற்றத்தோடு தொடர்புபடுத்திப் பரிசீலிக்குக.

6. 'பால்நிலைச் செயற்போக்கின் மூலமான சமூகமயமாக்கம் மற்றும் ஆளுமை விருத்தித் தந்திரோபாயங்களானவை உலகம் முழுவதுமாகப் பின்பற்றப்படுகின்றது. பால்நிலையினை அடிப்படையாகக் கொண்ட வன்முறையின் எதிர்நிலையான விளைவுகளைப் பெண்களே மேலதிகமாக அனுபவிக்கின்றனர்'. இக் கருத்துடன் நீங்கள் உடன்படுகிறீர்களா? உமது விடையினை உதாரணங்களுடன் விளக்குக.

*************